**செய்தி வெளியீடு எண்: 025** **நாள்:10.05.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் இன்று (10.5.2021) காத்திருப்போர் பட்டியலில் இருந்த பயணிகள் பயணம் செய்ய முடியாமல் நீண்ட நேரமாக தவித்து வருகின்றனர் என்ற செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், அப்பயணிகளின் குறைகளை போக்க நில நிர்வாக கூடுதல் ஆணையர் திருமதி மரியம் பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் திரு. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., ஆகிய அரசு உயர் அலுவலர்களை நேரடியாக சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு அனுப்பி வைத்து, உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில், இரயில் நிலையத்தில் காத்திருந்த பயணிகள் கண்ணப்பர் திடல் சமூகநலக் கூடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு அவர்களுக்கு உணவு மற்றும் குடிநீர் வழங்கப்பட்டது. மேலும், அப்பயணிகள் பயணம் செய்வதற்கு ஏதுவாக ரயில் வசதியை ஏற்படுத்தி தருவதற்கு இரயில்வே நிர்வாகத்துடன் தமிழக அரசால் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்துடன் பயணியர்களின் வசதிக்காக உதவி மேசை (Help Desk) வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பயணிகள் தங்கள் குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்து, தாங்கள் பயணம் செய்வதற்கு உரிய ஏற்பாடு செய்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**